

# 17 மாடிகளைக் கொண்ட பள்ளிக்கூடங்கள்

# கோலாலம்பூர் மாநகர் மன்றம் திட்டம்

கோலாலம்பூர், பிப். 19-

நாட்டின் தலைநகரான கோலாலம்பூரில் நிலத்தை மேலும் ஆக்ககரமான வகையில் பயன்படுத்தும் நோக்கத்தில் அதிக மாடிகளைக் கொண்ட பள்ளிக் கட்டடங்கள் கட்டப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் திட்டத்தின்கீழ் பத்து மாடிகள் முதல் பதினேழு மாடிகள் வரைக்குமான இரண்டு கட்டடங்கள் கட்டப்படும். அங்கு ஒரு நேரப் பள்ளிகள் செயல்படும் என்றும் பிரதமர்துறை அமைச்சர் (கூட்டரசு பிரதேசம்) டாக்டர் ஜலீஹா முஸ்தாபா தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த பல நாடுகளில் இதுபோன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மக்களவையில் அவர் தெரிவித்தார்.

இந்தக் கோட்பாடு ஆஸ்திரேலியாவில் பரவலாக கடைப்பிடிக்கப்படுகிறது. கல்வி, விளையாட்டுகள், பொழுதுபோக்கு போன்ற முக்கிய அம்சங்களை புறமொதுக்காமல் அப்பள்ளிகள் கட்டப்படும். அக்கட்டடங்களின் மொட்டை மாடிகளும் நல்லபடி பயன்படுத்தப்படும் என்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது அவர் குறிப்பிட்டார். இந்தப் பரிந்துரை குறித்து கல்வியமைச்சிலும் விவாதிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.